## கடந்த ஐந்தாண்டு கால ‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனைகளால்

# தி.மு.கழகக் கூட்டணிக்கு ஆதரவான அலை!

## “டெக்கான் கிரானிக்கல்” ஆங்கில நாளேட்டிற்கு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, ஏப். 16 –**

**“கடந்த ஐந்தாண்டு கால ‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனைகளால் தி.மு. கழகக் கூட்டணிக்கு ஆதரவான அலை வீசுகிறது” என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “டெக்கான் கிரானிக்கல்” ஆங்கில நாளேட்டிற்கு அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளார்.**

திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘டெக்கான் கிரானிக்கல்’ ஆங்கில நாளிதழுக்கு அளித்துள்ள நேர்காணலில் அளித்துள்ள தெளிவான விளக்கங்கள் வருமாறு :-



# A BRIGHT YESTERDAY, A BRIGHTER TOMORROW: STALIN

*Chief Minister M.K. Stalin projects a positive picture of economic development and an equitable society in this exclusive e-mail interview to **Senior Editor B. Vijayalakshmi.** Excerpts from the interview:*

STRAIGHT TALK

**Looking ahead, what is your long-term vision for Tamil Nadu's development over the next decade?**

Our primary objective is to transform Tamil Nadu into a one-trillion-dollar economy by the year 2030. To achieve this goal, numerous economic initiatives are being undertaken under the 'Dravidian Model' of governance. We released the 'Vision 2030' report, which outlines a structured roadmap for achieving our long-term

Thittam' which enables women to travel free of cost on government city buses.

women's rights.

**How do you balance**

India in terms of the highest number of factories. Chennai, known as the

governance style as the 'Dravidian Model'. It is precisely because the DMK government consistently champions inclusive growth and social justice as its defining identity. To further reinforce the impact of social justice, and guided by the visionary outlook of 'Dravidian Model' the DMK government has formulated various new schemes aimed at education, employment and the upliftment of marginalised communities. As these are implemented — Tamil Nadu will, as always, stand as a guiding light for social justice to India!

**You've taken strong positions against the Centre. Where do you draw the line between federal assertion and**

Constitution itself!

The DMK's opposition regarding issues such as fiscal devolution (like GST), educational interventions (like the Neet) and the imposition of Hindi is not merely a political confrontation; it centers on the fundamental rights and welfare of the people of the state. We never compromise on these matters.

It is the DMK's fundamental principle that a state can progress — and remain strong — only if it possesses fiscal autonomy and administrative freedom; and, consequently, India itself will emerge as a stronger nation. We are conducting protests precisely to uphold that principle. For issues such as the Governor delaying bills, we are approaching the Supreme Co-

Assembly elections, the rural local body elections held in 9 districts in 2021, the urban local body elections of 2022, the Erode East by-election and the 2024 parliamentary elections— the DMK has been securing a continuous streak of victories across all these polls.

We have achieved this remarkable feat even amidst shifting political landscapes. The parties that formed the alliance under the leadership of the DMK in 2018 have continued to journey alongside us. For the 2026 Assembly elections, several additional parties have joined our fold. After five years of governance, we face no anti-incumbency sentiment; rather, a wave of pro-incumbency is sweeping

### உலக நாடுகளுக்கு இணையாக தமிழ்நாட்டின் பொருளாதாரம்!

**கேள்வி:-** *எதிர்காலத்தை நோக்குகையில், அடுத்த பத்தாண்டுகளில் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான உங்களின் நீண்டகால தொலைநோக்குப்பார்வை என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** 2030-ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டை ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றுவதே முதன்மையான இலக்காக கொண்டிருக்கிறோம். இந்த இலக்கை அடைவதற்காக திராவிட மாடல் ஆட்சியின்கீழ் பல பொருளாதார முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொலைநோக்கு இலக்கை அடைவதற்கான கட்டமைக்கப்பட்ட பாதையை விளக்கும் ’விஷன் 2030’ அறிக்கையை வெளியிட்டோம். உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாடுகள் (GIM) மற்றும் வெளிநாட்டுப் பயணங்கள் மூலம் சுமார் ரூ.12 லட்சம் கோடிக்கும் அதிகமான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. ’விஷன் 2030’- ல் எலக்ட்ரானிக்ஸ், வாகன உதிரி பாகங்கள், தகவல் தொழில்நுட்பம், காலணிகள் மற்றும் ஜவுளித் துறைகளில் அதிக முதலீடுகள் ஈர்க்கப்படுகின்றன. சுமார் ரூ.18 லட்சம் கோடி மதிப்பிலான முதலீடுகளை ஈர்ப்பது, ஏற்றுமதியை $120 பில்லியனாக உயர்த்துவது, தொழில்துறை மற்றும் உள் கட்டமைப்பு விரிவாக்கம் மூலம் 50 லட்சம் புதிய வேலைவாய்ப்புகளைத் தோற்றுவித்தல் போன்ற இலக்குகளை நிர்ணயித்திருக்கிறோம். 2035-ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டை உலகின் சிறந்த 20 ஸ்டார்ட்அப் மையங்களில் ஒன்றாக மாற்றுவதற்கான திட்டம் செயல்படுத்தப்படும். மின்சார வாகனங்கள் (EV), செமிகண்டக்டர் உற்பத்தி, மற்றும் மின்னணுப் பொருள்கள் தயாரிப்பில் உலகளாவிய மையமாகத் தமிழ்நாடு திகழ்வதற்கு இலக்கு வைத்திருக்கி றோம். வெறும் முதலீடு, பொருளாதாரம் என்பதோடு இந்தத் தொலைநோக்கு முடிந்துவிடாது. கல்வி, மனிதவள மேம்பாடு, திறன் மேம்பாடு, கிராமப்புற மற்றும் நகர்ப்புற மேம்பாடு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டை அதிகரிப்பது மற்றும் கால நிலை மாற்றத்தை எதிர்கொள்வது, நவீன நீர் மேலாண்மை என அனைத்தையும் தொலைநோக்குடன் எல்லா துறையிலும் செயல்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த இலக்கை முன்னின்று நிறைவேற்றப் போவது பெண்கள்தான் என நாங்கள் சொல்லியிருக்கிறோம். திராவிட மாடல் அரசில் தமிழ்நாட்டின் பொருளாதாரம், தொழில் வளர்ச்சி புதிய உயரத்தைத் தொட்டுள்ளதுபோல் – அடுத்த பத்தாண்டுகளில் உலக நாடுகளுக்கு இணையான பொருளாதாரத்தைத் தமிழ்நாடு பெறும். அந்த இலக்கை நோக்கி எங்கள் வெற்றிப் பயணம் தொடரும்.

### தி.மு.க. என்றைக்கும் பெண்ணுரிமை போற்றும் இயக்கம்!

**கேள்வி:-** *அரசியலில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீட்டை முன்னெடுக்கும் நிலையில், உங்கள் கட்சி கூடுதல் பெண் தலைவர்களை வலுப்படுத்த எவ்வாறு தயாராகி வருகிறது?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில் திமுக எப்போதுமே முன்னிலையில் இருக்கும். மகளிருக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, அரசு நகரப் பேருந்துகளில் பெண்கள் கட்டணமின்றிப் பயணம் செய்யும் விடியல் பயணத் திட்டம் ஆகியவற்றின் மூலம் பெண்களுக்குச் செலவைக் குறைத்து, அவர்களின் சமூகப் பங்களிப்பை அதிகரித்திருக்கிறோம்., மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கம், புதுமைப்பெண் திட்டம், பெண் கல்வி ஊக்குவிப்பு, பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், திருமண உதவித் திட்டம் எனப் பெண்கள் முன்னேற்றத்திற்காகச் சமூகப் பாதுகாப்பு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். பெண்களுக்கு வேலை வாய்ப்பில் சம உரிமை கிடைக்க வேண்டும் என்பதற்காக கலைஞர் ஆட்சியில்தான் 1989-ல் அரசு வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு 30 சதவீத ஒதுக்கீட்டை திமுக அரசு அறிமுகப்படுத்தியது. பெண்களுக்குத் தந்தைவழிச் சொத்தில் சம உரிமை வழங்கும் சட்டத்தை 1989-இல் திமுக கொண்டுவந்தது. பாலினப் பேதமின்றிப் பெண்களை அர்ச்சகர்களாகவும், ஓதுவார்களாகவும் நியமித்தோம். மாநகராட்சி மேயர்கள் போன்ற முக்கியப் பொறுப்புகளிலும் பெண்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. கட்சியைப் பொறுத்தவரையில் கட்சிப் பொறுப்புகளில் பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற உட்கட்சி விதிமுறைகள் முறையாகப் பின்பற்றப்படுகின்றன. நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்பதை திமுக ஒரு கொள்கையாகவே தொடர்ந்து வலியுறுத்தி பல்வேறு போராட்டங்களை நடத்தி – பல்வேறு கட்டங்களில் வலியுறுத்தி வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் என்றுமே பெண்ணுரிமை போற்றும் இயக்கம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தலைவர் கலைஞர் வழியில் என் பணியை செய்து வருகிறேன்!

**கேள்வி:-** *கட்சிக்குள் பொறுப்புகளை வழங்கும்போது, அனுபவத்தையும் இளைய தலைமுறையினரின் ஆற்றலையும் நீங்கள் எவ்வாறு சமன் செய்கிறீர்கள்?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** திமுக வெளியிட்ட வேட்பாளர் பட்டியலை ஆய்வு செய்து பார்த்தால் உங்கள் கேள்விக்கான பதில் கிடைக்கும். அனுபவத்திற்கும் இளமைக்கும் இடையே உள்ள சமநிலையை உணர்வீர்கள். அனுபவத்திற்கும் இளமைக்கும் சமமான முக்கியத்துவத்தை அளித்திருக்கிறோம். மொத்தமுள்ள 164 கழக் வேட்பாளர்களில், சுமார் 60 பேர் புதிய முகங்கள். இது மொத்த வேட்பாளர்களில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகம். இளைஞர்கள் மற்றும் படித்தவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் 15 மருத்துவர்கள், 17 பொறியாளர்கள், 29 வழக்கறிஞர்கள், 7 முனைவர் பட்டம் பெற்றவர்கள் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர். மொத்த வேட்பாளர்களில் பெண்ணுரிமை போற்றும் வகையில் 18 பேர் பெண் வேட்பாளர்கள்! திமுகவில் 16 இலட்சத்துக்கும் அதிகமான நிர்வாகிகள் இருக்கிறார்கள். தேர்தலில் நிற்க வேட்பு மனு அளித்த அனைவரையும் சந்தித்து – அவர்களிடம் நேர்காணல் நடத்தியுள்ளேன். அவர்களில் இளைஞர்களும் இருக்கிறார்கள். மூத்தவர்களும் இருக்கிறார்கள். அனைவரையும் அரவணைத்துச் செல்லும் தலைவனாக – தலைவர் கலைஞர் காட்டிய வழியில் என் பணியைச் சரியாகச் செய்து வருகிறேன் என்பதே ஒவ்வொரு திமுக தொண்டனின் எண்ணமும் என்பதை நான் அறிவேன்.

### தொழில் முதலீட்டு மையமாக தமிழ்நாடு திகழ நடவடிக்கை!

**கேள்வி:-** *பிற மாநிலங்களின் போட்டி அதிகரித்து வரும் சூழலில், தமிழ்நாடு தொடர்ந்து ஒரு தொழில்முறை மற்றும் முதலீட்டு மையமாகத் திகழ்வதை உறுதிசெய்ய உங்களின் திட்டங்கள் என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** இந்தியாவின் பொருளாதார வரைபடத்தில் தமிழ்நாடு ஒரு அசைக்க முடியாத இடத்தில் இருக்கிறது. ஒட்டுமொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP), மகாராஷ்டிராவிற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு இந்தியாவின் 2-ஆவது பெரிய பொருளாதாரமாக உள்ளது. இந்தியாவிலேயே இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தை எட்டிய ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் 11.19% என ஒன்றிய அரசு சொல்லியபடி நாட்டின் வேகமாக வளரும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகள் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. ‘இந்தியாவின் டெட்ராய்ட்’ என்று அழைக்கப்படும் சென்னை மற்றும் மாநிலத்தின் பிற பகுதிகள் வாகன உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளன. குஜராத் மற்றும் மகாராஷ்டிராவைப் பின்னுக்குத் தள்ளி, ஜவுளி ஏற்றுமதியில் தமிழ்நாடு தற்போது இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது. மின்னணுச் சாதனங்கள் ஏற்றுமதியிலும் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. இந்தியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதியில் தமிழ்நாடு 3-வது இடத்தைப் பிடித்துள்ளது. தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் சுமார் ரூ.3.62 லட்சமாக உயர்ந்துள்ளது, இது தேசிய சராசரியை விட 1.77 மடங்கு அதிகம். பெரிய மாநிலங்களுக்கிடையே தனிநபர் வருவாயில் தமிழ்நாடு 3-வது இடத்தில் உள்ளது. சமூக முன்னேற்றக் குறியீடு (Social Progress Index) மற்றும் நிதி ஆயோக்கின் பல குறியீடுகளில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணியில் உள்ளது. இந்தச் சாதனைகளை எல்லாம் பிற மாநிலங்களுடன் கடும் போட்டிக்கு மத்தியில்தான் தமிழ்நாடு சாதித்தது. தமிழ்நாடு தொடர்ந்து ஒரு தொழில் மற்றும் முதலீட்டு மையமாகத் திகழ்கிறது. இது தொடரும்!

### சமூக நீதி வழிகாட்டி மாநிலமாக தமிழ்நாடு திகழும்!

**கேள்வி:-** *உங்கள் அரசு சமூக நீதியை வலியுறுத்தியுள்ளது: வரும் ஆண்டுகளில் அதன் தாக்கத்தை மேலும் ஆழப்படுத்த நீங்கள் எவ்வாறு திட்டமிட்டுள்ளீர்கள்?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** சமூகநீதிக் கொள்கை என்ற அடித்தளத்தில்தான் திமுக என்ற இயக்கமே அமைத்திருக்கிறது. 69 சதவீத இட ஒதுக்கீட்டை பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு தமிழ்நாட்டில் முதன் முதலில் செயல்படுத்திய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். இதற்கு வித்திட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!

தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் சமூக நீதித் திட்டங்கள் முறையாக மக்களைச் சென்றடைகிறதா? என்பதைக் கண்காணிக்கத் தனியாக ஒரு குழுவையே திமுக அரசு அமைத்தது. இந்தியாவில் முதன்முதலாகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்கெனத் தனி அமைச்சகத்தைத் திமுக அரசுதான் உருவாக்கியது. எங்கள் ஆட்சி முறையை ஏன் ’திராவிட மாடல்’ என்று அழைக்கிறோம் தெரியுமா? அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் சமூக நீதியை திமுக அரசு தனது அடையாளமாகத் தொடர்ந்து முன்னிறுத்து வதால் தான். சமூகநீதியின் தாக்கத்தை மேலும் வலுப்படுத்த திமுக அரசு ’திராவிட மாடல் 2.0’ என்ற தொலைநோக்குப் பார்வையுடன் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் விளிம்புநிலை மக்கள் மேம்பாட்டிற்காகப் பல்வேறு புதிய திட்டங்களைத் திட்டமிட்டுள்ளது. அவற்றைச் செயல்படுத்தும் போது – தமிழ்நாடு எப்போதும் போல் இந்தியாவிற்கே சமூக நீதி வழிகாட்டி மாநிலமாகத் திகழும்!

### அரசியல் சட்டத்தின் மீது எங்களுக்குள்ள அக்கறை!

**கேள்வி:-** *ஒன்றிய அரசுக்கு எதிராக நீங்கள் உறுதியான நிலைப்பாடுகளை எடுத்துள்ளீர்கள்: கூட்டாட்சி உரிமைகளுக்கான வலியுறுத்தலுக்கும், அரசியல் மோதலுக்கும் இடையிலான எல்லையை நீங்கள் எங்கே வரையறுக்கிறீர்கள்?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** “அரசுக்கும் அரசியலுக்கும்” இடையிலான எல்லைக் கோட்டைத் தெளிவாக உணர்ந்தவன் நான். அதே போல் கூட்டாட்சி உரிமைகளுக்காகப் போராடுவதற்கும், ஒன்றிய அரசுடனான தேவையற்ற அரசியல் மோதலுக்கும் இடையிலான எல்லையைத் திமுக மிகத் தெளிவாகத் தன் கொள்கை நிலைப்பாடுகள் மூலம் வரையறுக்கிறது. ’மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி’ என்ற எங்களின் தாரக மந்திரமே இந்த எல்லையின் அடிப்படையில் அமைந்ததுதான்.

எங்கள் போராட்டத்தை அரசமைப்புச் சட்டத்தின் கட்டமைப்பிற்குள்ளேயே (Constitutional Boundaries) முன்னெடுக்கிறோம். ஒன்றிய அரசுடன் மோதுவது எங்களுக்கு எப்போதுமே நோக்கமாக இருந்ததில்லை. அரசிலமைப்புச் சட்டம் மாநிலங்களுக்கு வழங்கியிருக்கும் அதிகாரத்தைப் பாதுகாப்பதே திமுகவின் இலக்கு. ஆளுநர்கள் மாநில அரசின் செயல்பாடுகளில் குறுக்கிடுவது மாநிலத்தின் சுயாட்சி உரிமை மீதான அத்துமீறல். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு இணையாக இன்னொரு அரசை ஆளுநர் நடத்த முடியாது என்பது தான் அரசியலமைப்பு சட்டம் சொல்கிறது. அதனை உச்சநீதிமன்றமும் ஆளுநர்களின் தலையில் கொட்டி உறுதி செய்திருக்கிறது. இதனை ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையிலான மோதல் போக்காக எப்படிப் பார்க்க முடியும்?. தமிழ்நாடு மட்டுமல்ல, எந்த மாநிலமாக இருந்தாலும் ஆளுநர்கள் தங்கள் அதிகாரத்தை மீறித் தலையிடுவதை திமுக என்றைக்கும் ஏற்றுக் கொள்ளாது. வேடிக்கை பார்க்காது. ஏன் எதிர்க்கட்சியாக இருந்தபோது கூட போராடியிருக்கிறது. மாநில சுயாட்சியைத் தாண்டி அரசியலமைப்புச் சட்டத்தின் மீது நாங்கள் காட்டும் அக்கறை அது!

ஜி.எஸ்.டி போன்ற நிதிப் பகிர்வு, நீட் தேர்வு போன்ற கல்வி தலையீடு, இந்தித் திணிப்பு போன்ற விவகாரங்களில் திமுகவின் எதிர்ப்பு என்பது வெறும் அரசியல் மோதல் அல்ல. மாநில மக்களின் அடிப்படை உரிமைகள், நலன் சார்ந்தது. இதில் நாங்கள் எப்போதுமே சமரசம் செய்துகொள்வதில்லை. நிதி தன்னாட்சி. நிர்வாகத் சுதந்திரம் ஆகியவை இருந்தால் மட்டுமே ஒரு மாநிலம் முன்னேறும். வலுவாக இருக்க முடியும். அதனால் இந்தியாவும் வலுவான நாடாக மாறும் என்பது திமுகவின் அடிப்படைக் கொள்கை.

அந்தக் கொள்கையை நிலைநாட்டத் தான் போராட்டங்கள் நடத்துகிறோம். ஆளுநரின் மசோதா தாமதம் போன்ற சிக்கல்களுக்கு எல்லாம் உச்ச நீதிமன்றத்தை நாடிச் சட்டப்பூர்வமான தீர்வுகளைத் தேடுகிறோம். ஜனநாயக ரீதியான சட்டரீதியான விஷயத்தை அரசியல் மோதலாக எப்படிப் பார்க்க முடியும்?

### வளர்ச்சியில் தமிழ்நாடு மையப்புள்ளியாகத் திகழும்!

**கேள்வி:-** *இந்தியாவின் பொருளாதார மற்றும் அரசியல் எதிர்காலத்தை வடிவமைப்பதில் தமிழ்நாட்டின் பங்கு என்னவாக இருக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** இந்தியாவின் பரப்பளவில் 4 சதவிகிதமும், மக்கள் தொகையில் 6 சதவிகிதமும் மட்டுமே கொண்டது தமிழ்நாடு. ஆனால், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சுமார் 9.4 சதவிகித பங்களிப்பைத் தமிழ்நாடு வழங்குகிறது. இதனை வைத்தே இந்தியாவின் பொருளாதார மற்றும் அரசியல் எதிர்காலத்தைக் கட்டமைப்பதில் தமிழ்நாடு ஒரு முக்கிய வளர்ச்சி இயந்திரமாக விளங்குவதை அறியலாம். தமிழ்நாடு 2030-ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயரும் போது இந்தியாவின் பொருளாதாரமும் உயரும். அரசியல் எதிர்காலத்தை எடுத்துக் கொண்டால் இந்தியக் கூட்டாட்சித் தத்துவத்தில் (Federalism) தமிழ்நாடு ஒரு தனித்துவமான மற்றும் வலுவான அரசியல் சக்தியாகத் திகழும். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமூக நீதி மற்றும் பெண்களுக்கான அதிகாரப் பகிர்வு போன்ற தமிழ்நாட்டின் கொள்கைகள் இந்தியாவிற்கே ஒரு முன்மாதிரியாகக் கருதப்படுகிறது. நிதி அதிகாரம் மற்றும் மாநில உரிமைகள் தொடர்பான விவாதங்களில் தமிழ்நாடு முன்னிலை வகித்து, ஒன்றிய, மாநில உறவுகளை மறுவரையறை செய்வதில் முக்கியப் பங்காற்றும். உயர்கல்வி சேர்க்கை விகிதத்தில் தேசிய சராசரியை விட இருமடங்கு அதிகமாகக் கொண்டுள்ளதால், இந்தியாவின் அறிவுசார் பொருளாதாரத்தை வழிநடத்தும் திறன் தமிழ்நாட்டிற்கு உண்டு. வலுவான தொழில்துறைக் கட்டமைப்பு, உயர்தர மனித வளம் மற்றும் சமத்துவக் கொள்கைகள் மூலம் இந்தியாவின் எதிர்கால வளர்ச்சியை நிர்ணயிக்கும் மையப்புள்ளியாகத் தமிழ்நாடு இருக்கும்.

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்



வரும் தேர்தலில், அ.தி.மு.க.வின் துரோகங்களுக்கும், பாசிச பா.ஜ.க.வின் வஞ்சகங்களுக்கும் முடிவுரை எழுதி,
தமிழ்நாட்டைத் தொடர்ந்து காப்பாற்றப் பாடுபடும் ஸ்டாலின் பின் அணி வகுப்போம்; பீடிக்க வரும் பிணியைத் துரத்துவோம்!

